**செ. கு. எண்**:313 **நாள்**:31.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 31.8.2012

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தனிச்சியம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அழகுசோலை என்பவரின் மகன் திரு. சுரேஷ் 28.8.2012 அன்று அய்யங்கோட்டை கிராமம், சித்தாலங்குடி பிரிவு அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், படிக்காசுவைத்தான்பட்டி கிராமம் அருகே 30.8.2012 அன்று சங்கரன்கோயிலிருந்து மதுரை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து வேன் மீது மோதியதில், வேன் ஓட்டுநர் திரு. கனகராஜ் மற்றும் பேருந்தில் பயணம் செய்த ராஜபாளையம் வட்டம், செட்டியார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கராஜ் என்பவரின் மகன் திரு. வேல்ராஜ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. சுரேஷ், திரு. கனகராஜ் மற்றும் திரு. வேல்ராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், படிக்காசுவைத்தான்பட்டி கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் 20 நபர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், விருதுநகர் மற்றும் மதுரை மாவட்ட

நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், படிக்காசுவைத்தான்பட்டி கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**